2017 ஒற்றோபர் 24 ஆந் திகதி 72 ஆவது ஐக்கிய நாடுகள் தினத்தில் வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் திரு.பிரசாத் காரியவசம் ஆற்றிய குறிப்புரைகள்

செல்வி.உனா மெக்கௌலி அவர்களே!

இலங்கையிலுள்ள ஐக்கிய நாடுகள் வதிவு கூட்டிணைப்பாளரும் மற்றும் ஐக்கிய நாடுகளுக்கான அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் பிரதிநிதியுமானவர்களே!

இலங்கையிலுள்ள ஐக்கிய நாடுகள் உள்நாட்டு குழுவின் பதவியினர்களே!

ஐக்கிய நாடுகள் தன்னார்வ தொண்டர்களே!

பெண்மணிகளே! கனவான்களே!

ஐக்கிய நாடுகள் சபை, எழுபத்தியிரண்டாவது ஆண்டில் கால்தடம் பதிக்கும் இத் தருணத்தில், ஐக்கிய நாடுகளுடனான இலங்கையின் விதிமுறை உறவிற்கு அறுபத்தியிரண்டு ஆண்டுகள் நிறைவாகியுள்ளது.

62 ஆண்டுகளில் 30 ஆண்டுகளுக்கும் மேற்பட்ட காலமாக இலங்கையின் வெளிநாட்டு சேவையில் சேவையாற்றிய உத்தியோகத்தர் என்ற வகையிலும், ஜெனீவா மற்றும் நியூயோர்க்கில் நிரந்தர பிரதிநிதியாக சேவையாற்றியவர் என்ற வகையிலும், தற்போது ஐக்கிய நாடுகளில் உடன்படிக்கைச் சபையின் உறுப்பினராக சேவையாற்றி வருபவர் என்ற வகையிலும், ஐக்கிய நாடுகள் சபைக்கும், எனது நாட்டிற்கும் சேவையாற்றுபவர் என்ற ரீதியிலும், ஐக்கிய நாடுகளுடனான இலங்கையின் தற்போதைய உறவானது முன்னெப்போதும் இல்லாத வகையிலான சிறப்பான நிலையை அடைந்துள்ளது என்பதை நான் தன்னம்பிக்கையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

பேரழிவுகளை உருவாக்கிய இரு உலகப் போர்களைத் தொடர்ந்து, அங்கத்துவ நாடுகளின் உறுப்பினர்களாகிய எம்மால் ஐக்கிய நாடுகள் சபை உருவாக்கப்பட்டது. 1945 ஒற்றோபர் 24 ஆந் திகதி செயல் வலுவுக்கு வந்த இந்த அமைப்பில், போரிலிருந்தான அடுத்தமைந்த தலைமுறையினரை பாதுகாத்தல், உரையாடல்களை மேம்படுத்தல் மற்றும் மதிப்பளித்தல், ஜனநாயகம், சர்வதேச ஒத்துழைப்பு மற்றும் சர்வதேச சட்டத்திட்டத்துக்கு அமைவான முறைமை ஆகிய உறுதிமொழிகள் செய்யப்பட்டிருந்தன.

இலங்கையானது உள்நாட்டு ரீதியாக செயற்பட்டு வந்த காலமது. 1948 ஆம் ஆண்டு சுதந்திரத்தின் போது கிழக்கின் வளவாய்ப்புள்ள சுவிட்சர்லாந்து எனப் பாராட்டைப் பெற்றிருந்ததுடன், மிகவும் துரிதமாக எமது வழியை நாம் இழந்துள்ளோம். பெறுமதிகளையும், கொள்கைகளையும் மறந்திருந்த சர்வதேச மேடையில் சுதந்திரத்திற்கு பின்னரான தேசமாக நாம் மதிக்கப்பட்டதுடன், அச் சமயத்தில் ஒரு தேசம் என்ற ரீதியில் ஐக்கிய நாடுகள் அமைப்புடன் இணைந்து கொண்டோம். மீண்டும் ஒரு தனிமைப்படுத்தலை நோக்கி நாம் பயணித்திருந்த வேளையில், எமது தேசத்தின் மக்கள் 2015 ஜனவரி 8 ஆந் திகதி மீண்டுமொருமுறை ஜனநாயகத்தை கையில் எடுத்து சர்வதேச மேடையில் தனிமைப்படுத்தப்பட்டிருந்த எமது நாட்டினை மீட்டெடுத்தனர். சர்வதேச சமூகத்துடன் இருந்த இணக்கமற்ற நடைமுறைகள் மற்றும் வீண் வாதங்கள் ஆகியவற்றைத் தவிர்த்து, எமது குடிமக்கள் மீதான பொறுப்புணர்வை

தன்னம்பிக்கையுடன் மீண்டும் ஒருமுறை நாம் முன்னோக்கி எடுத்துச் சென்றதுடன், ஐக்கிய நாடுகள் அமைப்பின் பெறுமதிகள் மற்றும் கொள்கைகளை மேம்படுத்துவதற்காக எம்மை மீள அர்ப்பணித்துக் கொண்டுள்ளோம்.

ஐக்கிய நாடுகள் அமைப்பின் எழுபதாவது ஆண்டு பூர்த்தியடைந்து வெறும் 9 மாதங்களின் பின்னர், சனாதிபதி, பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர், பாராளுமன்ற பேச்சாளர் மற்றும் வெவ்வேறு கட்சிகளைச் சேர்ந்த உறுப்பினர்கள் அனைவரும் ஒன்றிணைந்து இந்த அமைப்பிற்குள் வந்ததுடன், ஐக்கிய நாடுகள் அமைப்பைக் கொண்டாடுவதற்கும், ஐக்கிய நாடுகளுடனான இலங்கையின் அறுபது ஆண்டு கால அங்கத்துவத்தைக் கொண்டாடுவதற்குமாக இலங்கையிலுள்ள ஐக்கிய நாடுகள் குடும்பமாக உங்களுடன் கைகோர்த்துக் கொண்டோம்.

இதுவே ஐக்கிய நாடுகள் அமைப்பு மற்றும் அதன் பணிகளை தொடர்ச்சியாக நாம் கௌரவப்படுத்தி வருவதற்கான உந்துசக்தியாக அமைந்துள்ளது. இதுவே ஐக்கிய நாடுகள் அமைப்பு, அதன் முறைமைகள் மற்றும் செயல்முறைகள் ஆகியவற்றுடன் நாம் தொடர்ச்சியாக ஈடுபட்டு வருவதற்கான உந்துசக்தியாக அமைந்துள்ளது.

ஐக்கிய நாடுகள் அமைப்பு "மக்களாகிய நாம்" ற்காக தாபிக்கப்பட்டு, செயற்பட்டு வருகின்றது. மனிதர்கள் முகங்கொடுத்து வரும் பாரதூரமான பிரச்சனைகள் தொடர்பில் கவனம் செலுத்தி வரும் முன்னோடியாக இவ்வமைப்பு உள்ளது. வறுமையிலிருந்து உலகை மீட்க உதவிகளை வழங்குகிறது. ஜனநாயகத்தை மேம்படுத்த உதவியளித்தல் மற்றும் சிறுவர்கள், பெண்கள் மற்றும் குருமார்களுக்கு ஏற்ற பாதுகாப்பான உலகை உருவாக்கி வருகிறது. உலகம் முழுவதுமுள்ள சமூகங்களை ஒன்றிணைக்கவும், வலுவான கூட்டிணைவுகளை கட்டியெழுப்பவும் மற்றும் மிகச்சிறந்த கைகோர்ப்புகளை உருவாக்கவும் இவ்வமைப்பு உதவிகளை வழங்கி வருகிறது.

உண்மையிலேயே அவை உலகில் நம் கண் முன்னால் இருக்கும் பிரச்சினைகள் அச்சுறுத்துவதாக உள்ளன. காலநிலை மாற்றத்தின் விளைவுகள், முரண்பாடுகள், சரணாகதிகள், வன்முறை தீவிரவாதம் மற்றும் வெறுப்பு அதிகரித்தல், மனித உயிருக்கு ஏற்படக்கூடிய அச்சுறுத்தல்கள் மற்றும் தீவிரவாதம் ஆகியனவாகும். உலகில் மனிதர்களால் நாளாந்தம் முன்னெடுக்கப்படும் நிகழ்வுகளினால் "மக்களாகிய நாம்" பல விளைவுகளுக்கு முகங்கொடுத்துக் கொண்டிருப்பதை நாம் காண்கிறோம். ஆம், இவை கருத்தில் கொள்ளப்பட வேண்டிய சவால்களாக காணப்படுகின்றன.

இருந்தபோதிலும், எவ்வளவு கடினமானவைகளாக இருந்தபோதிலும், எத்தகைய சவால்மிக்கவைகளாகவிருந்தபோதிலும், பன்முகத்தன்மை, மனித உரிமைகள், வேறுபாட்டினை மதித்தல் மற்றும் சேர்ந்து பணியாற்றும் கொள்கை ஆகியவற்றின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட ஐக்கிய நாடுகள் சபையுடன் இணைந்து உலகம் முகங்கொடுத்து வரும் பிரச்சனைகளை நிவர்த்தி செய்ய முடியும் என நான் திடமாக நம்புகிறேன்.

பெண்மணிகளே! கனவான்களே!

உனா குறிப்பிட்டுள்ளதைப் போல, செயலாளர் நாயகம் அன்டோனியோ கட்டரஸ் ஒருசில சொற்களையே பேசுபவராகவுள்ளார். அதனால் அவருடைய ஒருசில வார்த்தைகள் மிகவும் அர்த்தம் பொதிந்தவைகளாகவுள்ளன. இந்த வருடம் ஐக்கிய நாடுகள் பொதுப் பேரவையின் போது அரசாங்கத் தலைவர்கள் மற்றும் அரசாங்கத்திற்காக வாழ்த்துக்களை தெரிவிக்கும்

போது அவர் "வரலாறு என்பது நம் ஒவ்வொருவரின் தனிப்பட்ட செயற்பாடுகளிலும் வலுவாக தங்கியுள்ளது" எனக் கூறியுள்ளார்.

அநேக உலகத் தலைவர்கள் நெருக்கமாகக் கூடியிருந்த அறையில் அவர் உரையாற்றியுள்ளார். ஆனால், ஐக்கிய நாடுகள் சபையானது "மக்களாகிய நாம்" இனால் தாபிக்கப்பட்டுள்ளது என்பது அனைவரும் அறிந்துள்ளோம். இதில் உலகத் தலைவர்களும் மற்றும் ஏனையோரும் உங்கள் அனைவருக்கும் தெரியும். உலகத் தலைவர்களினால் மட்டுமே மாற்றத்தை உண்டாக்க முடியும் என சிலர் நம்பக்கூடும். ஆனால், "மக்களாகிய நாம்" இல் உள்ள நாம் ஒவ்வொருவருமே எமக்கே உரிய எமது தனிப்பட்ட வழிகளுடனும், உறுதியுடனும், செல்வாக்குமிக்க வரலாற்றுடனும், ஒரே சமயத்தில் ஒரு படிமுறையாகவும் பெருமளவு சாதனையைச் செய்ய முடியும் என நான் திடமாக நம்புகின்றேன்.

- எமது நாளாந்த செயற்பாடுகள் மூலமாகவும்,

- எமது தினசரி வாழ்வில் சிறிய தீர்மானங்களின் ஊடாக பசுமையான உலகம் மற்றும் நீல சமுத்திரத்திற்கு எவ்வாறு நாம் ஆதரவளிக்கிறோம் என்பது மூலமாகவும்,

- செயலின்மையை தழுவுதல் ஊடாகவும்,

- முரண்பாட்டிற்கும் மேலாக உரையாடல்களை தழுவுவதன் ஊடாகவும்,

- எம் மத்தியில் மிகச்சிறந்த புரிந்துணர்வை ஊக்குவிப்பதன் ஊடாகவும்,

- வாழ்க்கையின் இயல்பு மற்றும் ஏனைய விடயங்களுடனான பிணைப்பினை அடையாளப்படுத்துவதன் ஊடாகவும்,

- வேற்று மொழியை பேசுவதாலேயோ அல்லது வேறுபட்ட நம்பிக்கைகளை கொண்டிருப்பதன் காரணத்திலேயோ, "மனிதம்" மற்றும் "மனிதாபிமானம்" ஊடாக நாம் அனைவரும் ஒன்றிணைக்கப்பட்டுள்ளதன் காரணமாக ஏனைய மனிதர்களிலிருந்து வேறுபடுத்தி பார்க்கப்படும் மனிதர்களைச் சென்றடைவதன் ஊடாகவும் மற்றும்

- எமது வாழ்வின் மிக முக்கியமானவர்களான சிறுவர்களுக்கு பெறுமதிகள் மற்றும் கோட்பாடுகளை வழங்குதல்.

பெண்மணிகளே! கனவான்களே!

சிறப்பானவற்றை செய்வதில் நாம் எவரும் சிறியவர்களோ, முக்கியமற்றவர்களோ அல்லது பலவீனமானவர்களோ இல்லை என நான் நம்புகிறேன். நாம் திடசங்கற்பத்தை மேற்கொண்டால், நேரடியான தாக்கத்தை எம்மால் உருவாக்க முடியும். மக்கள் மத்தியில் விழிப்புணர்வை உருவாக்குதல் மற்றும் நாம் ஒரே மனித குடும்பத்தை சேர்ந்தவர்களாக மக்களுக்கு உந்துசக்தியளித்தல் மற்றும் நம் அனைவரது நலனுக்காகவும் நாம் கட்டாயம் ஒன்றாக செயற்படல் ஆகியவை நோக்கி ஐக்கிய நாடுகள் சபை தலைமைத்துவம் ஏற்றல் வேண்டும்.

பெண்மணிகளே! கனவான்களே!

இலங்கையில் ஐக்கிய நாடுகளின் பணிகளை அரசாங்கத்திலுள்ள நாம் மதிக்கின்றோம்.

எமது நாட்டின் வரலாற்றில் இத்தகைய மிக முக்கியமான காலத்தில் நீங்கள் அனைவரும் வழங்கிய ஆதரவு விலைமதிப்பற்றது. எமக்கு முக்கியமான பிரிவுகளிலும், எமது ஜனநாயகத்தை வலுப்படுத்தும் குறிக்கோளை அடையும் தேடலில் ஆதரவை வழங்குதல், சமரசம், பாகுபடற்றதன்மையை உறுதிப்படுத்துதல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி மற்றும் நிலைபேறான சமாதானம் ஆகியவற்றில் அர்ப்பணிப்புடனும், உறுதிப்பாட்டுடனும் சேவையாற்றிய இலங்கையிலுள்ள ஐக்கிய நாடுகளின் உள்நாட்டு குழுவிலுள்ள அனைவருக்கும் எனது நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

உங்கள் அனைவருக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்ளும் அதேவேளை, சர்வதேச சமாதானம் மற்றும் பாதுகாப்பை ஊக்குவித்தல், அபிவிருத்தி, நோய்களை இல்லாதொழித்தல், வறுமையை ஒழித்தல் மற்றும் அனைவருக்கும் சிறந்த எதிர்காலத்தை உருவாக்கும் குறிக்கோளுடன் வலுவான ஐக்கிய நாடுகள் சபையை கட்டியெழுப்புதல் ஆகிய நடவடிக்கைகளில் தன்னலமற்று தமது வாழ்வை அர்ப்பணித்து செயற்பட்டு வரும் ஐக்கிய நாடுகள் அமைதி காப்போர் உள்ளடங்கலாக உலகம் முழுவதுமுள்ள ஒட்டுமொத்த ஐக்கிய நாடுகள் குடும்பத்திற்கும் எனது பாராட்டுக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றிகள்!